சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

அரசு தரப்பு சாட்சி 31 (LW-50 ) நாள் 07.10.2025

பெயர் திருப்பதி தொழில் காவல் துணைக்கண்காணிப்பாளர்

தந்தை பெயர் நாராயணசாமிவயது 53

கிராமம் அண்ணாநகர்தாலுக்கா சென்னை

(1 முதல் 10 குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் நபர் ஆஜர். குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை, பெருநகர காவல் மாவட்டம் அண்ணா நகர் உதவி ஆணையராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2024ல் மயிலாடுதுறை உட்கோட்ட காவல் துணைக்காணிப்பாளராக பணியில் இருந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 161/2024, ச/பி. 147,148,341,294(b), 307,302,120(B) IPC, r/w 25(1B) Arms Act r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST Act 2015 கீழ் மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையின் வழக்கை மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் 21.03.2024 தேதியிட்ட செயல் முறைப்படி மயிலாடுதுறை காவல் துணைக்காணிப்பாளரான நான் வழக்கு விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு வழக்கு கோப்பை பெற்று விசாரணையை தொடங்கினேன். அன்றைய தினமே காலை 5.15மணிக்கு சாட்சிகள் பாலாஜி மற்றும் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். **மாதரி வரைபடம் அசாஆ 38** ஆகும். பின்னர் சம்பவ இடத்திலிருந்த

N.S 07/10/25
ACP ANR

இரத்தக்கறை படிந்த தார்சாலை கப்பி கொஞ்சம் இரத்தக்கறை படியாத தார்சாலைகப்பிகள் கொஞ்சம் மாதிரிக்காக எடுத்தும், இரத்தகறை படிந்த வாடாமல்லி கலரில் வெள்ளை பார்டர் போட்ட வேட்டி ஒன்றும், TN 51 AP 7560 Hero honda splender plus இருசக்கர வாகனத்தை கைப்பற்றி மகசர் தயார் செய்தேன். சாட்சிகள் பாலாஜி மற்றும் மணிகண்டனிடம் கையொப்பம் பெற்றேன். ஏற்கனவே அசாஆ 3ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சாட்சிகள் முருகவேல், மார்டின் ஆகியோலரை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். பின்னர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போன அஜித்குமார் என்பவரின்பிரேதத்தில் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 8.00 மணிக்கு பிரேத விசாரணை ஆரம்பித்து 10.00 மணி வரை விசாரணை செய்து பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 39** ஆகும். பின்னர் ஆவணங்களுடன் தலைமைக்காவலர் 464 தனபால் என்பவர் மூலம் இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய உரிய படிவங்களுடன் அனுப்பினேன். பின்னர் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு சென்று இந்த வழக்கின் வாதியான சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் கிடைந்த தகவலின்பேரில் அன்றைய தினமே மயிலாடுதுறை மன்னம்பந்தல் ஏவிசி கல்லூரிக்கு பின்புறம் சம்பவத்தின் எதிரிகள் சந்திரமோகன், பாலாஜி, சதீஷ், ஸ்ரீராம், சந்திரமௌலி, மோகன்தாஸ் ஆகியோர் இருப்பதாக தகவல் கிடைத்ததன்பேரில் சென்று அவர்களை காரணம் கூறி கைது செய்து விசாரிக்க அவர்கள் சம்பவத்தை ஒப்புக்கொண்டு எவ்வித வற்புறுத்தலுமின்றி தன்னிச்சையாக தாமகவே முன்வந்து ஒரு ஒப்புதல்

07/10/25

வாக்குமூலம் கொடுத்ததை சாட்சிகள் ராஜசேகர், ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 17.45 மணிக்கு சந்திரமோகன் என்பவர் சம்பவத்தின் போது பயன்படுத்திய வாகனம் பதிவெண் இல்லாத வாகனங்கள் சிவப்பு நிற அப்பாச்சி பைக் ஒன்று, வெள்ளை நிற பல்சர் பைக் ஒன்று, வீச்சருவாள் ஒன்று 58 செமீ, அரிவாள் ஒன்று 41 செமீ வெட்டும்பகுதியும் 7 செமீ கைப்பிடியும், முன்னாள் உள்ள கைப்பிடியில் 5 செமீ பின்னால் உள்ள பித்தளை பகுதி சுமார் 2.5 செமீ கொண்டது, இரும்பு கொக்கி அடிப்பகுதி சுமார் 2.5 செமீ கொண்டது, மற்றொரு அரிவாள் மொத்த நீளம் சுமார் 58 செமீ, அதில் வெட்டும் இரும்பு பகுதி சுமார் 35 செமீ, இரும்பு குமிழ் சுமார் 1.5 செமீ மரக்கைப்பிடி சுமார் 11 செமீ கொண்டது, அடுத்த அரிவாள் 60 செமீ நீளம் அதில் வெட்டும் இரும்பு பகுதி குமார் 43.5 செமீ இரும்பு கைப்பிடி சுமார் 6.5 செமீ இரும்பு குமிழுடன் உள்ள மரப்பகுதி சுமார் 10 செமீ ஆகும். அடுத்த அருவாள் மொத்த நீளம் 50 செமீ, அதில் வெட்டும் பகுதி 45 செமீ, பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய வளைந்த பகுதி 14.5 செமீ ஆகும் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார் அவற்றை சாட்சிகள் முன்பு மகசரில் கைப்பற்றினேன். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றி சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து நிலைய பாதுகாப்பில் வைத்துவிட்டு உரிய விண்ணப்பங்களுடன் நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன். நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும்போது மற்ற எதிரிகள் பற்றிய விவரங்களை வேண்டுகோள் கடிதம் மூலம் தெரிவித்தேன். பின்ன இவ்வழக்கில் கொலையுண்ட அஜித்குமார் உடுத்தியிருந்த இரத்தக்கறை படிந்த **ஜீன்ஸ் பேண்ட் ஒன்று சாபொ 16** ஆகும். இரத்தகறையுடன் கூடிய

கருப்பு நிற **முழுக்கை சட்டை சாபொ 17** ஆகும் பூமர் என்று எழுதப்பட்ட இரத்தகறையுடன் கூடிறய டிராயர் மாடல் **ஜட்டி ஒன்று சபொ 18** ஆகும். முன்பக்கம் அருந்த நிலையில் இரத்தக்கறையுடன் கூடிய பிரவுன் கலர் பேன்ட் பெல்ட் **சாபொ 19** ஆகியவற்றை தலைமைக்காவலர் தனபால் நிலைவந்து ஒப்படைக்க அதை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். அது **அசாஆ 40** ஆகும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் பாலாஜி, மணிகண்டன், ராஜசேகர், ராஜமாணிக்கம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் ரவி, கனேசன், முரளி, ஆனந்தராஜ், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 06.03.2024 அன்று இவ்வழக்கின் வாதியான சரவணனை மீண்டும் விசாரித்தேன். இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகளின் சாதிசான்றிதழ்கள் கேட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். வழக்கில் கொலையுண்டு இறந்துபோன லோகநாதன் மகன் அஜித் என்பவர் இந்து – ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்றும் காயம் பட்ட சுப்ரமணியன் மகன் சரவணன் இந்து – ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்று மயிலாடுதுறை வட்டாட்சியர் சான்றிதழ் வழங்கினார். 25.03.2024 அன்று நகராட்சியில் மின்கம்பத்தில் இருந்த தெருவிளக்கு சம்பவத்தின்போது எரிந்தது பற்றியும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பினேன். பின்னர் இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் சந்திரமோகன், பாலாஜி, சதீஷ், ஸ்ரீராம், சந்திரமௌலி, மோகன்தாஸ், சத்யநாதன் ஆகியோரை மேலும் இவ்வழக்கின் உண்மை தெரிய வேண்டி போலிஸ் காவலில் எடுக்க உரிய நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தேன். பின்னர் நீதிமன்றத்திலிருந்து போலிஸ் காவல் எடுத்து எதிரிகளை பெரம்பூர் காவல் நிலையத்தில் பாதுகாப்பாக வைத்து விசாரித்தேன். விசாரித்தபோது எதிரிகள்

07/10/25

சந்திரமோகன், பாலாஜி, சதீஷ், ஸ்ரீராம், சந்திரமௌலி, மோகன்தாஸ், சத்யநாதன் தாமாகவே முன்வந்து தன்னிச்சையாக எவ்வித வற்புறுத்தலுமின்றி பெரம்பூர் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலர் பார்த்திபன் மற்றும் பெரம்பூர் கிராம உதவியாளர் கண்ணன், ஆகியோர் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். எதிரி சதீஷ் என்பவர் என்னை அழைத்து சென்றால் இவ்வழக்கின் பயன்படுத்திய ஆயுதங்களை மாப்படுகை சாலை தெருவில் உள்ள அவர் வீட்டில் சுமார் 45 செமீ நீளம் கொண்ட மரக்கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி ஒன்று அதில் இரும்பு பூண் 2 செமீ, மரக்கைப்பிடி 12 செமீ, வெட்டும் இருப்பு பகுதி 31 செமீ கொண்டது. சுமார் 12 செமீ மரக்கைப்பிடி L வடிவ இரும்பு கொக்கியுடன் கூடியது.

சுமார் 41.5 செமீ நீளம் கொண்ட மரக்கைப்பிடியுடன் கூடிய முன் பக்க பட்டை வடிவுடன் கூடிய கத்தி ஒன்று,

சுமார் 46 செமீ நீளம் கொண்ட அரிவாள் ஒன்று,

சுமார் 28 செமீ நீளம் கொண்ட பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்பு மகசரில் கைப்பற்றினேன். சதீஷ் கொடுத்த ஒப்புதல் **வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 41** ஆகும். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். 06.04.2024 அன்று இவ்வழக்கின் தலைமறைவு எதிரிகளான சத்யசீலன், அஜித்குமார், நாகராஜ் ஆகியோரை தகவலின்பேரில் சென்று ஆனந்த தாண்டவபுரம், கம்போஸ்ட அருகே இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அவர்களை காரணம் கூறி அவர்களை காலை 7.30 மணிக்கு கைது செய்து அவர்கள் தானே முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைசாட்சிகள் ராமச்சந்திரன், கார்த்திக் முன்னிலையில் பதிவு

செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின்போது எதிரி சத்யசீலன் எடுத்து ஆஜர் செய்த 32 செமீ கத்தியை மகசர் மூலம் கைப்பற்றினேன் அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 42** ஆகும். பின்னர் எதிரி நாகராஜன் எடுத்து ஆஜர் செய்த சுமார் 42.5 செமீ கொண்ட கத்தி ஒன்றை சாட்சிகள் ராமச்சந்திரன், கார்த்திக் முன்னிலையில் கைப்பற்றினேன் அது **அசாஆ 43** ஆகும். எதிரி நாகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அசாஆ 44** ஆகும். எதிரி சத்யசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அசாஆ 45** ஆகும். எதிரி அஜித்குமார் கொடுத்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அசாஆ 46** ஆகும். அவை ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகின்றன அது குறித்து வழக்கின் இறுதியில் முடிவு காணப்படும். சாட்சிகள் ராமச்சந்திரன், கார்த்திக் முன்னிலையில் வழக்கின் எதிரிகள் சத்யசீலன் மற்றும் அஜித் ஆகியோர் சம்பவத்தில் பயன்படுத்திய TN07BM8425 நீலக்கலர் பல்சர் மோட்டார் சைக்கிள் ஒன்று TN82K5436 பதிவெண் கொண்ட வெள்ளைக்கலர் அப்பாச்சி மோட்டார் சைக்கிள் ஒன்று, ரோஸ் கலர் டோக்கன் புக் ஒன்று, 21.03.2024 தேதியிட்ட 3266, 3785 எண் கொண்ட மோட்டார் சைக்கிள் ஸ்டாண்டு டோக்கன் இரண்டு, ஆகியவற்றை கும்பகோணம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள கிங்ஸ் மோட்டார் சைக்கிள் ஸ்டாண்டில் மகசரில் கைப்பற்றினேன் அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 47** ஆகும். மயிலாடுதுறை தட்டார தெருவில் வசிக்கும் புஷ்பராஜ் மகன் மணிகண்டன் என்பவர் தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக வாங்கிய TN82L4611 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் ரைடர் மோட்டார் சைக்கிளை தன் தம்பி நாகராஜ் என்பவர் வசம்

கொடுத்து அவர் சில மாதங்களாக ஓட்டிவந்ததாக எனக்கு கொடுத்த கடிதத்தை தாக்கல் செய்துள்ளேன். அந்த கடிதத்தை குறியீடு செய்வதில் கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணத்தை இந்த சாட்சி மூலம் குறீயீடு செய்ய முடியாது என்றும் அந்த கடித்தத்தை கொடுத்த நபர் மூலம் தான் குறியீடு செய்ய இயலும் என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. இந்த ஆட்சேபணை குறித்து வழக்கின் இறுதியில் முடிவு காணைப்படும். இக்கடிதத்தை புலனாய்வு அதிகாரி என்ற முறையில் ஒரு மூன்றாவது நபரிடமிருந்து பெற்றிருப்பதால் அதை புலனாய்வு அதிகாரி மூலமாக ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது. அந்த **கடிதம் அசாஆ 48** ஆகும். பின்னர் கைது செய்யப்பட்ட எதிரிகள் மற்றும் சொத்துகளுடன் நிலையம் வந்து உரிய வேண்டுகோள் கடிதம் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. சாட்சிகள் சரவணன், முருகவேல், மார்டின், வேலாயுதம், சாமிநாதன், மனோகர் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.04.2024 அன்று சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜீ, துணை தாசில்தார் ரஞ்சனி, முதல் நிலை காவலர் சதீஷ்குமார், தினேஷ்குமார், சாட்சிகள் ஐயப்பன், நரசிம்மவர்மன், மாதவன், ஞானபிரகாஷ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.05.2024 அன்று சுமார் 1.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரியான வாசி என்ற மகாவிஸ்ணுவை கிடைத்த தகவலின் பேரில் பல்லவராயன் பேட்டை பெட்ரோல் பங்க் அருகில் காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்விற்காக அனுப்பி பின்னர் அறிக்கை பெற்றேன். அந்த தடய

**அறிவியல் ஆய்வறிக்கைகள் அசாஆ 49 தொடர்** ஆகும். 14.05.2024 அன்று சாட்சி தாசில்தார் விஜயராணி, துணை தாசில்தார் ராஜீ ஆகியோரை விசாரித்தேன் அன்றைய தினமே செல்வக்குமார், நகராட்சி ஆணையர் சங்கர், டாக்டர் ரஞ்சனி சுபா, சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன், தலைமைக்காவலர் தனபால், ஆய்வாளர் சுப்ரியா, காவலர் முத்து லெட்சுமி ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.05.2024 அன்று டாக்டர்கள் அன்பரசன், வெங்கடசுப்ரமணியன், ஆகியோரை எதிரி சத்யசீலன் என்பவருக்கு சம்பவத்தின்போது ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சையளித்த டாக்டர் அஜய் சர்மா என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். 27.05.2024 அன்று சாட்சி துரைக்கண்ணு, மதுமிதா ஆகியோரை விசாரித்து வாக்குமூ பதிவு செய்தேன். 03.06.2024 அன்று சாடசிகள்ா் சிலம்பரசன், காயத்திரி, டாக்டர் ஆரிப் நிஷா, டாக்டர் கலைசெல்வி, டாக்டர் வீரச்செல்வன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கின் விசாரணை மற்றும் தன்மைக்கேற்ப சட்டப்பிரிவை மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் அந்த **சட்டமாறுதல் அறிக்கை அசாஆ 50** ஆகும். கடந்த 26.04.2024 அன்று மாலை 5.00 மணியளவில் இந்த வழக்கின் எதிரியான நாகராஜ் என்பவரின் சகோதரர் மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி வழக்கில் சம்பந்தப்பட்ட TN 82L4611 நீல மற்றும் கருப்பு நிறம் கொண்ட டிவிஎஸ் ரைடர் இருசக்கரவாகனத்தை ஆஜர் செய்தார் அந்த வாகனம் வழக்கு சொத்தாக அனுப்பி வைக்கப்பட்ட **அந்த வாகனம் சாபொ 17** ஆகும். 06.04.2024 அன்று ஆனந்ததாண்டவபுரம் கம்போஸ்ட் அருகில் எதிரி சத்தியசீலன் ஆஜர் செய்த 32 செமீ நீளம் கொண்ட மரக்கைப்பிடியுடன் கூடிய **இரும்பு கத்தி சாபொ 18** ஆகும். அதே தினம் பகல் 12.00 மணிக்கு

அதே இடத்தில் எதிரி நாகராஜ் என்னிடம் ஆஜர் செய்த 42 செமீ நீளம் கொண்ட பிடிமானம் கொண்ட **இரும்பு கத்தி சாபொ 19** ஆகும். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 147,148,341,294(b), 307,302,120(b), 324,326,149 IPC r/w 25(1B) Arms Act r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST Act 2015 ன் கீழ் காவல் இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

20.03.2024 அன்று மாலை நான் மயிலாடுதுறை நகரில் ரோந்து பணியில் இருந்தேன். மாலை 5 மணிமுதல் இரவு 11.00 மணிவரை ரோந்து பணியில் இருந்தேன். எந்தெந்த பகுதிகளில் ரோந்து பணி மேற்கொண்டேன் என்று நினைவில்லை. வழக்கு சம்பவம் நடந்த இடம் ஒரு பரப்பான இடம் என்றால் சரிதான். அது கல்லணை – பூம்புகார் பிரதான சாலை என்றால் சரியல்ல. திருவிழந்தூர் தெற்கு வீதி முழுவதும் வீடுகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். சம்பவம் இரவு 9.00 மணிக்கு நடந்தது. சம்பவத்தை பற்றி முதன்முதலாக எனக்கு ஆய்வாளர் தெரிவித்த வகையில் தெரியும். ஆய்வாளர் என்னிடம் மறுநாள் அதிகாலையில் தகவல் சொன்னார். அதுவரை எனக்கு சம்பவத்தை பற்றி விவரம் எதுவும் எனக்கு தெரியாது. எங்கள் காவல் நிலையத்திலிருந்து அரசு மருத்துவமனை இரண்டு கிமீ சம்பவ இடம் 2 கிமீ தூரமிருக்கும். மருத்துவமனையிலிருந்து எனக்கு இரவு 10.20 மணிக்கு தகவல் அனுப்பப்பட்டது. அஜித் குமார் என்பவர் கொலை செய்யப்பட்டு இறந்து விட்டார் என்பது வழக்கு. மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்தவுடன் நான் மருத்துவமனைக்கு போகவில்லை. இந்த வழக்கு சம்பவம் ஒரு பரபரப்பான சம்பவம் என்றால் சரிதான். அசா–29 ஆய்வாளர்

மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்றதாக என் விசாரணையில் தெரியவந்தது. அவர் மருத்துவமனைக்கு சென்றவுடன் உடனே எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை. நான் ஆய்வாளரை விசாரிக்கும்போது இந்த தகவலை ஏன் உடனடியாக தெரிவிக்கவில்லை என்று கேட்டு பதிலை பதிவு செய்யவில்லை. அஜித்குமாரின் பிரேதம் யாரால் எந்த வாகனம் மூலம் யாரின் உதவியால் எப்போது மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். இரவு சுமார் 9.30 மணிக்கு கொண்டுவரப்பட்டது என்பதை பதிவு செய்துள்ளேன். TN 82P8447 என்ற பதிவெண் கொண்ட ஆம்புலன்ஸ் மூலம் சிலம்பரசன் என்ற ஓட்டுநர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டதாக தெரிந்து கொண்டேன். மேற்படி சிலம்பரசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கின் சம்பவ சாட்சிகளாக சுமார் 5 முதல் 7 பேர் வரை காட்டப்பட்டுள்ளார்கள். அந்த சம்பவ சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள எந்த நபரும் அஜித்தை மருத்துவமனைக்கு எடுத்து செல்லவில்லை என்றால் அதை பற்றி என்னிடம் சொல்லவில்லை நானும் விசாரிக்கவில்லை. கொலையுண்டு இறந்து போன பிரேதம் மருத்துவமனைக்கு வந்தால் அது சம்பந்தமாக உடனடியாக மருத்தவமனையால் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். அஜித் இறந்தது தொடர்பாக காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் வாய் மொழியாக தகவல் வந்தது. அந்த தகவலை யார் பெற்றார் என்றால் அதை நான் விசாரிக்கவில்லை. அது போல் வரும் தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்வது வழக்கு. அதை பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்களா என்று நான் விசாரிக்கவில்லை. காவல்

இறுதியறிக்கையின் படி 2022ல் நடைபெற்ற மற்றொரு கொலை வழக்குடன் தொடர்புடையது என்றால் சரிதான். இதற்கு முன்பு இரண்டு வழக்குகள் தொடர்புடையதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவை கொலை மற்றும் கொலை முயற்சி வழக்கு. அஜித்குமாரின் உறவினர்கள் மருத்துவமனையில் இருந்தார்காள என்று அசா 29 ஐ கேட்டு தெரிந்து கொண்டேன். சரவணனை மருத்துவமனைக்கு கொண்டு வந்த நபர் அவரின் மாமா துரைக்கண்ணு. அவரை ஆய்வாளர் விசாரித்தாரா என்று எனக்கு தெரியாது. காயம் பட்ட நபரை விசாரித்தால் சரியான தகவல் கிடைக்கும் என்பதால் அவரை விசாரித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் அசாஆ 1 மற்றும் 37 ஆவணங்கள் முதன்மையானவை அல்ல என்றால் சரியல்ல. அவை பின்னிட்டு கலந்து ஆலோசித்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. அசாஆ 1 ஆவணம் குவிமுச பிரிவு 154 படியான முதல் தகவல் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் முதல் எதிரி கண்ணன் கொலை வழக்கில் சாட்சி என்றால் சரிதான். அவர் தான் புகார்தாரர் அசாஆ 1. அந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்ட நாய் கொலையுண்ட அஜித்துக்கு சொந்தமானது. அந்த நாய் என்னானது என்று எந்த சாட்சியும் என்னிடம் சொல்லவில்லை. அசா 1 ன் விபத்து பதிவேட்டில் மது வாடை வீசுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் என்னிடம் மது அருந்தியதாக சொல்லவில்லை. நான் அந்த கேள்வியை பதிவு செய்யவில்லை. இது சம்பந்தமாக மருத்தவரிடம் கேட்டபோது நோயாளி தீவிர காயம் ஏற்பட்டு சிகிச்சைக்கு வந்ததால் நான் சிகிச்சையில் கவனம் செலுத்தினேன் என்று சொன்னார். இந்த விவரத்தை நான் பதிவு செய்யவில்லை. மது வாடை வீசுவதாக மட்டுமே

N.D 07/10/25

சொல்லியுள்ளதாலும், மது குடித்த போதையில் இருந்ததாக அவர் சொல்லாததாலும் அதை நான் குறிப்பிட்டு பதிவு செய்யவில்லை. நான் இந்த வழக்கிற்கேற்ப சந்தர்ப்பத்திற்கேற்ப சமயோஜிதமாக பதிலளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா 1 சரவணனுக்கு சொன்ன நேரத்தில் சொன்னபடி சொன்ன விதத்தில் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. புகாரில் சரவணன் நாயை அழைத்து சென்றதாக சொல்லியுள்ளார் ஆனால் மேட்டிங் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனந்தராஜ் என்பவர் தனது நண்பர் என்று குறிப்பிட்டுள்ளார். புகாரில் 2 மோட்டார் சைக்கிளில் நான்கு நபர்கள் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது. அவற்றின் பதிவெண் மற்றும் வாகன விவரம் சொல்லப்படவில்லை. எந்த வெளிச்சத்தில் சம்பவத்தை பார்த்தார்கள் என்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல என்னுடைய விசாரணையில் சாட்சிகள் சொல்லியுள்ளார். சம்பவ சாட்சிகள் அந்த விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை. என்னுடைய புலன் விசாரணையின் போது தான் என் மேற்பார்வையில் வரைபடம் மற்றும் பார்வை மகசர் அதிகாலை 5.15 மணிக்கு தயார் செய்தார்கள். அந்த ஆவணங்கள் டார்ச் லைட வெளிச்சம், வாகனத்தின் வெளிச்சம் மற்றும் மின்கம்ப வெளிச்சத்தில் தயார் செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த விவரங்கள் பார்வை மகசரில் சொல்லப்படவில்லை ஆனால் சுமார் 50 அடி தூரத்தில் மின்கம்ப வெளிச்சம் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. புகாரில் எதிரியின் பெயர் எதுவும் சொல்லவில்லை. அசா 1 புகாரில் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் தெரிந்தவர்கள் என்றும் குறிப்பிடப்படவில்லை. அசாஆ 37 காலம் 7ல் அடையாளம் தெரிந்த பெயர், முகவரி தெரியாத நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அசா 1 சரவணனின் அசாஆ 35 விபத்து

பதிவேட்டில் நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் அடையாளம் எதுவும் புகாரில் சொல்லப்படவில்லை. எதிரிகளின் பெயர் மற்றும் அடையாளங்களை எவ்வாறு எப்போது தெரிந்து கொண்டதாக சம்பவ சாட்சிகள் என்னிடம் சொன்னார்களா என்றால் சொன்னார்கள் நான் புகார்தாரர் மற்றும் சாட்சிகளை விசாரிக்கும்போது சொன்னார்கள். புகார்தார் என்னுடைய வாக்குமூலத்தில் அவர்களின் பெயர் முகவரி எப்படி தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. அசா 15 மற்றும் 16 ஆகியோருக்கு சம்பவ இடத்திற்கு அலுவலகம், குடியிருப்பு இல்லை ஆனால் தேர்தல் பறக்கும் படை அலுவல் உண்டு. அவர்களை 07.04.2024 அன்று விசாரித்தேன். மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் சம்பவ நடந்த பகுதியில் அவர்களின் அலுவல் இருந்தது. அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அசா 15, 16 இருவரும் கொலை சம்பவத்தை பார்த்தபிறகு எங்களுக்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்திருக்கலாம். அதை பற்றி நான் எந்த பதிலும் கேட்டு பதிவு செய்யவில்லை. வழக்கின் உண்மையான சம்பவம் மறைக்கப்பட்ட கற்பனையாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேண்டிய நபர்களை சாட்சியாகவும் வேண்டாத சிலரை எதிரிகளாகவும் சேர்த்து இந்த வழக்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசா 3 மற்றும் மாதவன் ஆகியோருக்கு சம்பவ இடத்தில் குடியிருப்பு இல்லை என்றால் சரிதான். அவர்கள் வாக்குமூலத்தில் சொந்த வேலையாக சம்பவ இடம் வந்ததாக சொல்லியுள்ளார். அவர்கள் என்ன வேலையாக யாருடைய வேலையாக வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சரவணன்

எவ்வளவு நேரம் இருந்தார் என்பதை பற்றி விசாரிக்கவில்லை. அவர்கள் எதிரிகள் நாகராஜன், சத்யசீலன் இருவரும் அவர்களிடமிருந்து அரிவாளை வாங்கி அஜித்தை வெட்டி தலையை துண்டாக எடுத்துவிட்டார்கள் என்றும் அதன்பிறகு என்னை மகாவிஷ்ணு, அஜித்குமார் ஆகியோர் எதிரே மறைத்தார்கள் என்றும் சுற்றி நின்று நான்கு புறமும் எதிரிகள் என்னை மறைத்தார்கள் என்றும் நான் எதிரே இருந்த வீட்டிற்கு போய் கதவை முடும்போது சதீஷ் கதவை முடி என் வலது கை ஆட்காட்டி விரலை வெட்டிவிட்டார் என்ற விவரத்தையும், எதிரிகளை தனக்கு எப்படி தெரியும் என்ற விவரத்தையும், அங்கிருந்து யார் ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள் என்ற விவரத்தையும், சம்பவம் நடந்த நேரம் மற்றும் எந்த வெளிச்சத்தில் எதிரிகளை அடையாளம் கண்டார் என்ற விவரத்தையும் சொன்னார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட விசயங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. அசா 2 முருகவேல் எதிரிகளின் பெயரை பசங்க சொல்லி தெரிந்து கொண்டேன் என்றும் கலைஞர் காலனி ஆட்கள் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றும் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. எந்தெந்த வண்டியில் என்ன பதிவெண் கொண்ட வாகனத்தில் யார் யார் போனார்கள் என்ற விவரத்தை என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சரவணனும் அஜித்தும் போன வண்டியை அங்கு வந்தவர்கள் மோதி கீழே தள்ளி அஜித்தை வெட்டினார்கள் என்ற விவரத்தையும், சத்யசீலன் நாகராஜன் ஆகியோர் அரிவாளை வாங்கி அஜித்தலையில் வெட்டினார்கள் என்ற விவரத்தையும், தடுக்க வந்த சரவணனை ஐந்து பேர் வெட்டினார்கள் என்ற விவரத்தையும், யார் யார்

யாரை எந்தெந்த இடத்தில் வெட்டினார்கள் என்ற விவரத்தையும், சம்பவத்தின்போது செல்போன் சரவணனிடம் இருந்ததா என்ற விவரத்தையும் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 21.03.2024 அன்று அசா 3 கொடுத்த வாக்குமூலத்தில் மாதவன் மங்கநல்லூரை சேர்ந்தவர் என்ற விவரத்தையும், யாருடைய வேலை காரணமாக அங்கு வந்தார் என்ற விவரத்தையும், அஜித் வந்த வாகனத்தை இடித்து தள்ளினார் என்ற விவரத்தையும், அப்பாச்சி பைக்கில் வந்த பாலாஜி, ஸ்ரீராம், சதீஷ் ஆகியோர் வெட்டினார்கள் என்ற விவரத்தையும், அவன் சாட்சி சொல்லுவான், சரவணன் தோப்பு தெரு பக்கம் ஓடினான் என்ற விவரத்தையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்த இடத்தில் இருந்தவர்களையும் சான்று பொருட்களை கைப்பற்றியதாக சொல்லப்படும் இடத்தில் இருந்தவர்களையும் சாட்சியாக இருக்குமாறு அழைத்து அவர்களின் கையொப்பத்தை பெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளாக குறிப்பிட்ட நபர்கள் யாருக்கும், அந்த இடத்தில் குடியிருப்போ அலுவலோ இல்லை என்றால் சரியல்ல. மறு வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் நான் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. அவை அனைத்து நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் அவர்கள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லைர என்றாலும் அதன்படி நான் எந்த சான்று பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் முன்னிடப்பட்டுள்ள சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்திற்கும் எதிரிகளுக்கு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த ஒரு எதிரிக்கும்

07/10/24

எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முன்னிடப்பட்டுள்ள சான்றாவணங்கள், வாக்குமூலங்கள், சான்று பொருட்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து கலந்தாலோசித்து ஒரு அமைப்பை சேர்ந்தவர்களின் அழுத்தத்தின் காரணமாக பொய்யாகவும் கற்பனையாகவும் உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் அவை உண்மையானவை அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் நான் சரியான வழியில் புலன் விசாரணை செய்யாமல் அழுத்தத்தின் காரணமாக தவறான முறையில் தவறான நபர்கள் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சம்பவ சாட்சிகள் யாருடைய உடைகள் மீதும் அஜித்குமார்மற்றும் சரவணன் ஆகியோரின் இரத்தக்கறை படிந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் அனைத்தும் பொய்யாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

**2, 4, 9, 10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நாய் என்னானது என்ற விவரத்தை நான் விசாரணையில் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. அசாஆ 39 பிரேத விசாரணை அறிக்கையில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் லோகநாதன், பாபு, அலெஸாண்டர், தர்மா ஆகியோரை சாட்சியாக விசாரித்துள்ளேன் அவர்கள் யாரும் சம்பவ இடத்திற்கு சம்பந்தபட்டவர்கள் இல்லை என்றால் சரிதான். அசா 1 சரவணனை 21.03.2024 அன்று பகல் 12.00 மணியளவில் தஞ்சாவூர் மருத்தவமனையில வைத்து விசாரித்தேன். அவரை விசாரிக்கும் வரை எனக்கு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் அது சரியல்ல அதற்கு முன்பே இரண்டு சாட்சிகளை விசாரித்துள்ளேன். அவர்கள் பெயர் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் யாரையும் சாட்சிகளிடம் அடையாளம் அணிவகுப்பு

மூலம் அடையாளப்படுத்தி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பெயர் விவரங்களை என் விசாரணையில் சொன்னதால் நான் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. இந்த நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள எதிரிகள் தான் என்பதை நிரூபிக்க வாக்குமூலமோ ஆவணமோ முன்னிறுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சட்ட விதிமுறைகளை பின்பற்றி விசாரணை மேற்கொள்ளவில்லை என்றாலும் ஏற்கனவே இருந்த பகையினை முன்னிறுத்தி இந்த எதிரிகள் மீது பொய்யாக குற்றச்சாட்டை வனைந்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு [illegible] சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை